## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 6(LW-10 ) | நாள் | 27.10.2025 |
| பெயர் | ரமா | தொழில் | - விவசாயம் |
| கணவர் பெயர் | கல்யாண் குமார் | கிராமம் | - முட்டம் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | - 40 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் முட்டம் கிராமம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்து போனது என் மகன் ஹரிஷ். மற்றொருவர் ஹரிசக்தி ஆவார். சாட்சி தன் மகன் பெயரை சொல்லி அழுகிறார். ஆஜர் எதிரி மூவேந்தன் கத்தியால் குத்தியால் என் மகன் இறந்துபோனார். ஆஜர் எதிரிகளை தெரியும். சாட்சி கூண்டில் நிற்றும் இன்று ஆஜராகத மூவேந்தனை தவிர மற்ற சாட்சிகளின் பெயரை சொல்லி விரலை நீட்டி அடையாளம் காட்டுகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முனுசாமி மகள் காயத்ரியை ராஜ்குமார் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இருவரையும் ஊர்காரர்கள் ஊருக்குள் வரக்கூடாது என தடுத்து ்வைத்தார்கள். கடந்த பிப்ரவரி மாதம் 2025ம் ஆம்வருடம் 14ம் நாள் என் மகன் ஹரிஷ், அஜய், ஹரிசக்தி, தினேஷ் ஆகிய நால்வரும் இரவு ஒரு 8.00 மணியளவில் தெருமுக்கூட்டில் பம்படியில் உட்கார்ந்திருந்தார்கள் அப்போது சத்தம் கேட்டது தான் ஓடிபோய் பார்த்தேன். அப்போது என் மகன் ஹரிஷ் குடல் சரிந்து கீழே கிடந்தான். ஹரிசக்தி பட்டக்ஸில் காயம் பட்டு கீழே கிடந்தான். நான்

K7 Lo7

அப்போது பார்க்கும்போது மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகியோர் கையில் கத்தி இருந்தது. சாட்சி தொடர்ந்து அழுகிறார். அப்போது மஞ்சுளா என்பவர் ஏன்டா இந்த பரதேசி நாய்களிடம் வைத்துக்கொள்கிறீர்கள் குச்சிக்காரி தேவுடியாக மகனே என்று திட்டி தினேஷை பார்த்து ஏன்டா என் மகனை பார்த்து ஊளையிட்டாய் என்று திட்டினார். என் சின்ன மகன் அஜய்க்கு கத்தியால் இடது கை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டது. அதோடு அவர்களை மயிலாதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னாலே நான் சென்றேன். அங்கு என் மகன் இறந்து விட்டதாக சொன்னார். மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள். மீண்டும் 20.02.2025 அன்று செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்்திலிருந்து என் வீடு கிழக்கு புறம் சுமார் 10 அடி தூரமிருக்கும். எதிரிகள் வீடு கோவிலுக்கு பக்கத்தில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து கோவில் சுமார் 15 அடி தூரமிருக்கும். அந்த கோவிலை சுற்றிதான் எங்கள் வீடும் எதிரிகளின் வீடும் உள்ளது. சம்பவ இடத்தில் சம்பவத்திற்கு பிறகு ஊர்காரர்கள் சுமார் 10 முதல் 15 பேர் இருந்திருப்பார்கள். இருசக்கர வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். 9.00 மணிக்கெல்லாம் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். அந்த கூட்டத்தில் எங்களுக்கு வேண்டியவர்கள் காயம் பட்ட மூன்று பேரை தவிர அங்கிருந்தவர்கள் எங்கள் தெருக்காரர்கள். நான் வந்து அரை மணி நேரத்தில் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். நானும் இருசக்கர வாகனத்தில் தான் மருத்தவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். காயத்ரி–

K. ரமா

ராஜ்குமார் திருமணம் சம்மந்தாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் நேரடியாக எந்த பிரச்சனையும் இல்லை. பம்படிக்கு வர எதிரிகள் வீட்டை தாண்டி வரவேண்டும் என்றால் கோவிலிலிருந்து தெற்கு பக்கம் வந்தால் பம்படி வந்துவிடும். நாங்கள் கிழக்கிலிருந்து வடக்கு பக்கம் போகவேண்டும். என் மகன் மற்றும் அவரின் நண்பர்கள் சம்பவ இடத்திற்கு சென்ற விவரம் எதிரிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனை சென்ற பிறகு தான் அவர்களுக்கு எப்படி காயம்பட்டது என்று தெரிந்து கொண்டேன். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது எதிரிகள் யாரும் அந்த இடத்தில் இல்லை. இந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மற்றவர்களின் தூண்டுதலின்பேரில் எதிரிகளின் பெயரை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

K. ராமா

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/10/...

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 7 (LW-26) | நாள் | 27.10.2025 |
| பெயர் | டாக்டர். தமிழ்குமரன் | தொழில் | மருத்துவர் |
| | | கிராமம் | |
| தந்தை பெயர் | அ. பழனிசாமி | வயது | 34 |
| தாலுக்கா | | | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 15.02.2025 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த மருத்துவர் வினோத் ஆகிய நாங்கள் இருவரும் சேர்ந்து திருவாரூர் மருத்துவக்கலூரி மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவ உதவி பேராசியர் மருத்துவர் நவீன் அவர்கள் தலைமையில் பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண்.57/2025 என்ற வழக்கில் இறந்து போன ஹரிசக்தி, த/பெ. பாலமுருகன் என்பவருக்கு பெரம்பூர் காவல் ஆய்வாளர் காவலர் 628 நவீன்ராஜ் கொடுத்த வேண்டுகோளை என்பவரிடமிருந்து பெற்று இறந்தவரின் உடல் மீது 11.45 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினோம். பிணம் விறைப்பு தன்மையுடன் இருந்தது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் மல்லாந்த நிலையில் இருந்தது. இரத்தம் கலந்த உமிழ் நீர் வாய் மற்றும் மூக்கு வழியாக வெளியேறியிருந்தது. கை, கால் விரல் நகங்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டது. சாய்ந்த நிலையிலான வெட்டுக்காயம் 5x2செமீ அளவில் அதன் ஆழம் தசைப்பகுதி வரை

(Dr. P. TAMILKUMARAN)

காணப்பட்டது. இடது பக்க பட்டக்ஸில் glutual region ல் காணப்பட்டது. சிவந்த சிராயப்பு காயம் இடது பக்க அடிவயிற்றில் 2x1 cm காணப்பட்டது. உடலில் வேறு வெளிபுறகாயம் எதுவும் இல்லை.

**உட்புற ஆய்வில்**

தலை, மண்டையோடு மற்றும் சுற்றியுள்ள பகுதியில் வெளிப்புறம் காயம் எதுவும் இல்லை. மூளை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் இரத்த அணுக்கள் ஒரே இடத்தில் நெருக்கமாக ஒன்று சேர்ந்து சிவந்த நிலையில் சற்று வீங்கி காணப்பட்டது. மண்டையோட்டின் அடிப்பகுதி சரியான நிலையில் காணப்பட்டது. கழுத்தின் குறுத்தெலும்புகள் அனைத்தும் சரியான நிலையில் இருந்தது. மூச்சுக்குழாயில் நுரையுடன் கூடிய உமிழ்நீர் இருந்தது. நெஞ்சு பகுதியில் 4x3 செமீ அளவுள்ள இரத்தக்கட்டு இருந்தது. இதயத்தை சுற்றி 3x2 செமீ அளவான இரத்தக்கட்டு காயம் காணப்பட்டது. இதயம் வீங்கி காணப்பட்டது. இதயத்தின் ஒவ்வொரு அறையிலும் இரத்தக்கட்டு இருந்தது. இதயத்தில் இரத்தம் செலுத்தகூடிய தமனியில் இரத்தம் உறைந்து காணப்பட்டது. இரண்டு நுரையீரல்களும் வீங்கிய நிலையில் காணப்பட்டது. நுரையீரல்களின் ஒவ்வொரு அறையிலும் இரத்தம் கலந்த உமிழ்நீர் இருந்தது. இரைப்பையில் பாதியளவு செரிக்கப்பட்ட சுமார் 50 கிராம் உணவு பொருட்கள் இருந்தது. அதில் எந்த குறிப்பிட்ட வாடையும் இல்லை. குடல் காற்று நிரம்பி வீங்கியிருந்தது. கல்லீரல் சிவந்த நிலையில் அதன் சாதாரண அளவில் இருந்தது. மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் சாதாரண அளவில் சிவந்த நிலையில் காணப்பட்டது. சிறுநீரக பை காலியாக இருந்து. இடுப்பு மற்றும் தண்டுவட எலும்புகள் சாதாரண நிலையில் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்ட இரசாயன

(Dr. P. [illegible] Kumaran)

பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது.

**இறப்பிற்கான காரணம்**

கூர் மழுங்கிய ஆயுதத்தால் இறந்து போன நபர் தாக்கப்பட்டதால் இதயத்திற்கு செல்லக்கூடிய தமனி சுருங்கியதால் இதயம் செயலிழந்து இறப்பு ஏற்பட்டது. அந்த பிரேத பரிசோதணை அறிக்கையில் நாங்கள் மூவரும் கையொப்பம் செய்துள்ளோம் அது **அசாஆ 2** ஆகும். இறப்பிற்கான் காரணம் கூறி நாங்கள் வழங்கிய சான்று **அசாஆ 3** ஆகும். அடுத்து பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண்.57/2025 என்ற வழக்கில் இறந்து போன ஹரிஷ், த/பெ. கல்யாண்குமார் என்பவருக்கு பெரம்பூர் காவல் ஆய்வாளர் காவலர் 628 நவீன்ராஜ் கொடுத்த வேண்டுகோளை என்பவரிடமிருந்து பெற்று இறந்தவரின் உடல் மீது 1.00 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினோம். பிணம் விறைப்பு தன்மையுடன் இருந்தது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் மல்லாந்த நிலையில் இருந்தது. காது, மூக்கு தொண்டை பகுதியில் எவ்வித கசிவும் இல்லை. செங்குத்தான சற்று சாய்ந்த நிலையில் நீள்வட்ட வடிவிலான 4x2.5 செமீ குத்துக்காயம் இடது பக்க வயிறு பகுதியில் காணப்பட்டது. அதன் இருபக்கமும் கூர்மையாக இருந்தது. இடது மார்பிலிருந்து 18 செமீ கீழே காயம் காணப்பட்டது. காயத்தின் ஆழம் பின்னோக்கியும் கீழநோக்கியும் உள்நோக்கியும் தசை, தோல் ஆகியவற்றின் வழியாக காணப்பட்டது. சிறுகுடலில் 2x1x1 cm & பெருங்குடல் 1x0.5x0.5 அளவில் குத்துக்காயம் காணப்பட்டது. சுமார் ஒன்றரை லிட்டர் அளவு இரத்தம் உள் வயிற்றில் உறைந்த நிலையில் காணப்பட்டது. வலது கால் முட்டியில் கருஞ்சிவப்பான சிராய்ப்பு காயம் 1X0.5 அளவில் காணப்பட்டது.

**உட்புற ஆய்வில்**

தலை, மண்டையோடு, மூளை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் சாதாரண நிலையில் இருந்தது வெளிப்புறம் காயம் எதுவும் இல்லை. மூளையை அறுத்து பார்த்தபோது மூளை இரத்தம் ஓட்டம் இல்லாமல் வெளிரிய நிலையில் இருந்தது. தொண்டையில் உள்ள குறுத்தெலும்புகள் சாதாரண நிலையில் இருந்தது. மூச்சுக்குழாய் மற்றும் சுவாசக்குழாய் சாதாரண நிலையில் இருந்தது. இதயம் மற்றும் அதன் அறைகள் அனைத்தும் சாதாரண நிலையில் சிறிதளவு உறைந்த இரத்தத்துடன் காணப்பட்டது. இதய தமனிகள் சாதரண நிலையில் காணப்பட்டது. பெரிய இரத்தக்குழாய்கள் சாதாரண நிலையில் காணப்பட்டது. இரண்டு நுரையீரல் சரியான அளவிலும் வெளிர்ந்த நிலையிலும் காணப்பட்டது. சுமார் 75 கிராம் அளவிலான பகுதியாக செரிக்கப்பட்ட உணவு இரைப்பையில் காணப்பட்டது. எந்த வாடையும் இல்லை. குடலில் முதலாக சொல்லப்பட்ட காயமிருந்தது. மண்ணீரல் ஏற்கனவே அகற்றப்பட்டிருந்தது. கல்லீரல் மற்றும் இரண்டு சிறுநீரகங்கள் சரியான அளவில் காணப்பட்டது. சிறுநீரகபை காலியாக இருந்தது. இடுப்பெலும்புகள் தண்டுவட எலும்புகள் சாதாரண நிலையில் காணப்பட்டது.

**இறப்பிற்கான காரணம்**

இடது பக்க வயிற்று பகுதியில் ஏற்பட்ட குத்துக்காயத்தின் காரணமாக அதிகளவில் இரத்தப்போக்கு ஏற்பட்டு இறப்பு நடந்ததாக சான்று வழங்கினோம். அது அசாஆ 4 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(Dr. P. [illegible])

## 1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஹரிசக்தி என்பவருக்கு ஏற்கனவே இதய சிகிச்சை செய்யப்பட்டிருந்தது என்றால் அது இந்த சடலக்கூறாய்வில் தெரியவில்லை. சடலக்கூறாய்வில் ஹரிசக்தியின் இதயத்தை சரியாக பரிசோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்த நபரின் மூளை இதயம், மண்ணீரல், கல்லீரல், குடல் ஆகிய பகுதியில் இரத்தம் உறைந்து, நீர் நிரம்பியும் காணப்பட்டது. இறந்து போனவரின் இறப்பிற்கு முன்பு அவரின் உடல் உள்ளுறுப்புகள் பல விதங்களில் பாதிக்கப்பட்டிருந்தது அவற்றை நுண்ணோக்கி கொண்டு பார்த்து சோதனை செய்திருந்தால் இந்த பாதிப்புகள் தாக்கப்படுவதற்கு முன்னர் ஏற்பட்டதா அல்லது அதற்கு பின்னர் ஏற்பட்டதா என்று அறிய முடியும் என்றால் சாட்சி ஒரு நபர் இறந்தால் தான் அவ்வாறு மூச்சுக்குழாயில் உள்ள எச்சில் இரத்தத்துடன் கலந்து உறைந்து காணப்படும். இந்த நிலை தாக்குவதற்கு முன்னர் இருந்தா என்பது குறித்து நான் பரிசோதிக்க வில்லை என்றாலும் அதை பற்றி என்னால் சாட்சியமளிக்க முடியாது என்றால் சரியல்ல. கூர்மையில்லாத மழுங்கிய வட்டமான ஒரு பொருள் மீது இறந்த நபர் விழுந்தால் இத்தகைய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இறந்த ஹரிசக்தி என்பவரின் சடலக்கூறாய்வு, இறுதியறிக்கை முழுமையானது அல்ல என்றால் சரியல்ல. ஹரிஷ் என்பவருக்கு உடல் உள்ளுறுப்புகளில் இரத்த ஓட்டம் தடைபட்டிருந்தால் உள்ளுறுப்புகள் வெளிறிய நிறத்தில் காணப்படும் என்றால் சரிதான். ஹரிஷ் என்பவரும் அவருக்கு ஏற்பட்ட காயத்தால் இறக்கவில்லை என்றாலும் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்சியால் இறந்துவிட்டார் என்றால் அது சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

(Dr. P. [illegible])

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 8 (LW-27 ) | நாள் | 27.10.2025 |
| பெயர் | டாக்டர் வினோத் | தொழில் | மருத்துவர் |
| தந்தை பெயர் | மோகன்ராஜ் | கிராமம் | |
| தாலுக்கா | | வயது | 36 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 15.02.2025 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த மருத்துவர் தமிழ்குமரன் ஆகிய நாங்கள் இருவரும் சேர்ந்து திருவாரூர் மருத்துவக்கலூரி மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவ உதவி பேராசியர் மருத்துவர் நவீன் அவர்கள் தலைமையில் பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண்.57/2025 என்ற வழக்கில் இறந்து போன ஹரிசக்தி, த/பெ. பாலமுருகன் என்பவருக்கு பெரம்பூர் காவல் ஆய்வாளர் காவலர் 628 நவீன்ராஜ் கொடுத்த வேண்டுகோளை என்பவரிடமிருந்து பெற்று இறந்தவரின் உடல் மீது 11.45 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினோம். பிணம் விறைப்பு தன்மையுடன் இருந்தது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் மல்லாந்த நிலையில் இருந்தது. இரத்தம் கலந்த உமிழ் நீர் வாய் மற்றும் மூக்கு வழியாக வெளியேறியிருந்தது. கை, கால் விரல் நகங்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டது. சாய்ந்த நிலையிலான

வெட்டுக்காயம் 5x2செமீ அளவில் அதன் ஆழம் தசைப்பகுதி வரை காணப்பட்டது. இடது பக்க பட்டக்ஸில் glutual region ல் காணப்பட்டது. சிவந்த சிராயப்பு காயம் இடது பக்க அடிவயிற்றில் 2x1 cm காணப்பட்டது. உடலில் வேறு வெளிபுறகாயம் எதுவும் இல்லை.

**உட்புற ஆய்வில்**

தலை, மண்டையோடு மற்றும் சுற்றியுள்ள பகுதியில் வெளிப்புறம் காயம் எதுவும் இல்லை. மூளை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் இரத்த அணுக்கள் ஒரே இடத்தில் நெருக்கமாக ஒன்று சேர்ந்து சிவந்த நிலையில் சற்று வீங்கி காணப்பட்டது. மண்டையோட்டின் அடிப்பகுதி சரியான நிலையில் காணப்பட்டது. கழுத்தின் குறுத்தெலும்புகள் அனைத்தும் சரியான நிலையில் இருந்தது. மூச்சுக்குழாயில் நுரையுடன் கூடிய உமிழ்நீர் இருந்தது. நெஞ்சு பகுதியில் 4x3 செமீ அளவுள்ள இரத்தக்கட்டு இருந்தது. இதயத்தை சுற்றி 3x2 செமீ அளவான இரத்தக்கட்டு காயம் காணப்பட்டது. இதயம் வீங்கி காணப்பட்டது. இதயத்தின் ஒவ்வொரு அறையிலும் இரத்தக்கட்டு இருந்தது. இதயத்தில் இரத்தம் செலுத்தகூடிய தமனியில் இரத்தம் உறைந்து காணப்பட்டது. இரண்டு நுரையீரல்களும் வீங்கிய நிலையில் காணப்பட்டது. நுரையீரல்களின் ஒவ்வொரு அறையிலும் இரத்தம் கலந்த உமிழ்நீர் இருந்தது. இரைப்பையில் பாதியளவு செரிக்கப்பட்ட சுமார் 50 கிராம் உணவு பொருட்கள் இருந்தது. அதில் எந்த குறிப்பிட்ட வாடையும் இல்லை. குடல் காற்று நிரம்பி வீங்கியிருந்தது. கல்லீரல் சிவந்த நிலையில் அதன் சாதாரண அளவில் இருந்தது. மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் சாதாரண அளவில் சிவந்த நிலையில் காணப்பட்டது. சிறுநீரக பை காலியாக இருந்தது. இடுப்பு மற்றும் தண்டுவட எலும்புகள் சாதாரண

நிலையில் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்ட இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது.

**இறப்பிற்கான காரணம்**

கூர் மழுங்கிய ஆயுதத்தால் இறந்து போன நபர் தாக்கப்பட்டதால் இதயத்திற்கு செல்லக்கூடிய தமனி சுருங்கியதால் இதயம் செயலிழந்து இறப்பு ஏற்பட்டது. அந்த பிரேத பரிசோதனை அறிக்கையில் நாங்கள் மூவரும் கையொப்பம் செய்துள்ளோம் அது ஏற்கனவே **அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** இறப்பிற்கான் காரணம் கூறி நாங்கள் வழங்கிய சான்று ஏற்கனவே **அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** ஆகும். அடுத்து பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண்.57/2025 என்ற வழக்கில் இறந்து போன ஹரிஷ், த/பெ. கல்யாண்குமார் என்பவருக்கு பெரம்பூர் காவல் ஆய்வாளர் காவலர் 628 நவீன்ராஜ் கொடுத்த வேண்டுகோளை என்பவரிடமிருந்து பெற்று இறந்தவரின் உடல் மீது 1.00 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினோம். பிணம் விறைப்பு தன்மையுடன் இருந்தது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் மல்லாந்த நிலையில் இருந்தது. காது, மூக்கு தொண்டை பகுதியில் எவ்வித கசிவும் இல்லை. செங்குத்தான சற்று சாய்ந்த நிலையில் நீள்வட்ட வடிவிலான 4x2.5 செமீ குத்துக்காயம் இடது பக்க வயிறு பகுதியில் காணப்பட்டது. அதன் இருபக்கமும் கூர்மையாக இருந்தது. இடது மார்பிலிருந்து 18 செமீ கீழே காயம் காணப்பட்டது. காயத்தின் ஆழம் பின்னோக்கியும் கீழநோக்கியும் உள்நோக்கியும் தசை, தோல் ஆகியவற்றின் வழியாக காணப்பட்டது. சிறுகுடலில் 2x1x1 cm & பெருங்குடல் 1x0.5x0.5 அளவில் குத்துக்காயம் காணப்பட்டது. சுமார் ஒன்றரை லிட்டர் அளவு இரத்தம் உள் வயிற்றில் உறைந்த நிலையில்

காணப்பட்டது. வலது கால் முட்டியில் கருஞ்சிவப்பான சிராய்ப்பு காயம் 1X0.5 அளவில் காணப்பட்டது.

**உட்புற ஆய்வில்**

தலை, மண்டையோடு, மூளை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் சாதாரண நிலையில் இருந்தது வெளிப்புறம் காயம் எதுவும் இல்லை. மூளையை அறுத்து பார்த்தபோது மூளை இரத்தம் ஓட்டம் இல்லாமல் வெளிரிய நிலையில் இருந்தது. தொண்டையில் உள்ள குறுத்தெலும்புகள் சாதாரண நிலையில் இருந்தது. மூச்சுக்குழாய் மற்றும் சுவாசக்குழாய் சாதாரண நிலையில் இருந்தது. இதயம் மற்றும் அதன் அறைகள் அனைத்தும் சாதாரண நிலையில் சிறிதளவு உறைந்த இரத்தத்துடன் காணப்பட்டது. இதய தமனிகள் சாதரண நிலையில் காணப்பட்டது. பெரிய இரத்தக்குழாய்கள் சாதாரண நிலையில் காணப்பட்டது. இரண்டு நுரையீரல் சரியான அளவிலும் வெளிர்ந்த நிலையிலும் காணப்பட்டது. சுமார் 75 கிராம் அளவிலான பகுதியாக செரிக்கப்பட்ட உணவு இரைப்பையில் காணப்பட்டது. எந்த வாடையும் இல்லை. குடலில் முதலாக சொல்லப்பட்ட காயமிருந்தது. மண்ணீரல் ஏற்கனவே அகற்றப்பட்டிருந்தது. கல்லீரல் மற்றும் இரண்டு சிறுநீரகங்கள் சரியான அளவில் காணப்பட்டது. சிறுநீரகபை காலியாக இருந்தது. இடுப்பெலும்புகள் தண்டுவட எலும்புகள் சாதாரண நிலையில் காணப்பட்டது.

**இறப்பிற்கான காரணம்**

இடது பக்க வயிற்று பகுதியில் ஏற்பட்ட குத்துக்காயத்தின் காரணமாக அதிகளவில் இரத்தப்போக்கு ஏற்பட்டு இறப்பு நடந்ததாக சான்று வழங்கினோம். அது ஏற்கனவே **அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## 1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஹரிசக்தி என்பவருக்கு ஏற்கனவே இதய சிகிச்சை செய்யப்பட்டிருந்தது என்றால் அது இந்த சடலக்கூறாய்வில் தெரியவில்லை. சடலக்கூறாய்வில் ஹரிசக்தியின் இதயத்தை சரியாக பரிசோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்த நபரின் மூளை இதயம், மண்ணீரல், கல்லீரல், குடல் ஆகிய பகுதியில் இரத்தம் உறைந்து, நீர் நிரம்பியும் காணப்பட்டது. இறந்து போனவரின் இறப்பிற்கு முன்பு அவரின் உடல் உள்ளுறுப்புகள் பல விதங்களில் பாதிக்கப்பட்டிருந்தது அவற்றை நுண்ணோக்கி கொண்டு பார்த்து சோதனை செய்திருந்தால் இந்த பாதிப்புகள் தாக்கப்படுவதற்கு முன்னர் ஏற்பட்டதா அல்லது அதற்கு பின்னர் ஏற்பட்டதா என்று அறிய முடியும் என்றால் சாட்சி ஒரு நபர் இறந்தால் தான் அவ்வாறு மூச்சுக்குழாயில் உள்ள எச்சில் இரத்தத்துடன் கலந்து உறைந்து காணப்படும். இந்த நிலை தாக்குவதற்கு முன்னர் இருந்தா என்பது குறித்து நான் பரிசோதிக்க வில்லை என்றாலும் அதை பற்றி என்னால் சாட்சியமளிக்க முடியாது என்றால் சரியல்ல. கூர்மையில்லாத மழுங்கிய வட்டமான ஒரு பொருள் மீது இறந்த நபர் விழுந்தால் இத்தகைய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இறந்த ஹரிசக்தி என்பவரின் சடலக்கூறாய்வு, இறுதியறிக்கை முழுமையானது அல்ல என்றால் சரியல்ல. ஹரிஷ் என்பவருக்கு உடல் உள்ளுறுப்புகளில் இரத்த ஓட்டம் தடைபட்டிருந்தால் உள்ளுறுப்புகள் வெளிறிய நிறத்தில் காணப்படும் என்றால் சரிதான். ஹரிஷ் என்பவரும் அவருக்கு ஏற்பட்ட காயத்தால் இறக்கவில்லை என்றாலும் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்சியால் இறந்துவிட்டார் என்றால் அது சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/08/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 (LW- 14) | நாள் | 27.10.2025 |
| பெயர் | கலையரசன் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தந்தை பெயர் | | கிராமம் | 38. நீடூர் |
| தாலுக்கா | | வயது | 43 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை தாலுக்கா பட்டமங்கலம் கிராமம், அருணா நகரில் வசித்து வருகிறேன். தற்போது நான் நீடூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த பிப்ரவரி 2025 ல் அகரக்கீரங்குடியில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 15.02.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் ஹரிசக்தி, ஹரிஷ் ஆகியோர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகியோர் அரும்பாக்கம் பாலம் அருகில் ஆஜராவதால் அங்கு என்னையும் கிராம உதவியாளர் தனலெட்சுமி என்பவரையும் வரச்சொல்லி பெரம்பூர் காவல் நிலையத்திலிருந்து போன் வந்தது. அதன்பேரில் நாங்கள் இருவரும் அங்கு சென்றோம். தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகிய மூவரும் காவல் துறையிடம் எங்கள் முன்னிலையில் சரணடைந்தார்கள். அவர்கள் மூவரும் தனித்தனியாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதனடிப்படையில் தங்கதுரை பாலம் அருகே உள்ள புதரிலிருந்து ஒரு கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தியை காவல் துறையினர் என் முன்னிலையில் கிராம உதவியாளர்

ஜ. சத்தி

முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அதற்காக எழுதிய ஸ்டேட்மென்டில் கையெழுத்து போட்டேன். தங்கதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது அது மட்டும் **அசாஆ** 5 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது **அது அசாஆ** 6 ஆகும். இரண்டாது கையெழுத்து கிராம உதவியாளர் தனலெட்சுமியுடையது. அவருக்கடுத்து மூவேந்தன் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதுபோல் இன்னொரு புதலிருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். காவல் துறையினர் என் முன்னிலையில் கிராம உதவியாளர் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அதற்காக எழுதிய ஸ்டேட்மென்டில் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அசாஆ** 7 ஆகும். இரண்டாவது கையெழுத்து கிராம உதவியாளருடையது. அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அசாஆ** 8 ஆகும். இரண்டாது கையெழுத்து கிராம உதவியாளருடையது. அவருக்கடுத்து ராஜ்குமார் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மற்றொரு புதலிருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். காவல் துறையினர் என் முன்னிலையில் கிராம உதவியாளர் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். அதற்காக எழுதிய ஸ்டேட்மென்டில் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அசாஆ** 9 ஆகும். இரண்டாவது கையெழுத்து கிராம உதவியாளருடையது. அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அசாஆ** 10 ஆகும். இரண்டாது கையெழுத்து கிராம உதவியாளருடையது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் என்னை அழைத்த போது மூன்று எதிரிகள் என் முன்னிலையில் ஆஜராக இருப்பதாகவும் அரும்பாக்கம் பாலத்திற்கு வருமாறு சொன்னார். ஆய்வாளர் என்னை எங்கிருந்தபடி எங்களை அழைத்தார் என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசர் பேனாவால் எழுதப்பட்டுள்ளது, ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது ஏற்கனே தட்டச்சு செய்து ஆய்வாளர் வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து கேட்டார் நான் கையெழுத்து போட்டேன். மூன்றிலும் ஒரே நேரத்தில் நான் கையெழுத்து போட்டேன். கைப்பற்றுதல் மகசரும் ஏற்கனவே எழுதி வைத்திருந்ததை ஆய்வாளர் என்னிடம் காண்பித்து கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். மூன்று ஒப்புதல் வாக்குமூலத்திலும் பகல் 12.00 மணிக்கு எங்களை அழைத்ததாக உள்ளது ஒவ்வொரு வாக்குமூலமும் எப்போது தொடங்கி எப்போது முடிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. நான் கையெழுத்திட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றாலும் போலிசார் கேட்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் என் முன்னிலையில் எந்த கைப்பற்றுதலும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

6ம் நபர் தரப்பில் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/10/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை